NAME :

CLASS & SEC. :

# 5 ஆயத்தொலை வடிவியல்

*கோடு என்பது அகலமில்லா நீளமாகும் –யூக்ளிட்*

## பலவுள் தெரிவு வினாக்கள்

1. $(-5,0)$ , $(0,-5)$ மற்றும் $(5,0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு
   (அ) 0 ச.அலகுகள் (ஆ) 25 ச.அலகுகள் (இ) 5 ச.அலகுகள் (ஈ) எதுவுமில்லை
2. ஒரு சுவரின் அருகே நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு நபருக்கும் சுவருக்கும் இடையே உள்ள தூரம் 10 அலகுகள். சுவரை $Y$–அச்சாகக் கருதினால், அந்த நபர் செல்லும் பாதை என்பது
   (அ) $x = 10$ (ஆ) $y = 10$ (இ) $x = 0$ (ஈ) $y = 0$
3. $x = 11$ எனக் கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடானது
   (அ) $X$–அச்சுக்கு இணை (ஆ) $Y$–அச்சுக்கு இணை
   (இ) ஆதிப் புள்ளி வழிச் செல்லும் (ஈ) $(0,11)$ என்ற புள்ளி வழிச் செல்லும்
4. $(5,7)$, $(3,p)$ மற்றும் $(6,6)$ என்பன ஒரு கோடமைந்தவை எனில், $p$–யின் மதிப்பு
   (அ) 3 (ஆ) 6 (இ) 9 (ஈ) 12
5. $3x - y = 4$ மற்றும் $x + y = 8$ ஆகிய நேர்க்கோடுகள் சந்திக்கும் புள்ளி
   (அ) $(5,3)$ (ஆ) $(2,4)$ (இ) $(3,5)$ (ஈ) $(4,4)$
6. $(12,3)$ , $(4,a)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சாய்வு $\frac{1}{8}$ எனில், '$a$' –யின் மதிப்பு.
   (அ) 1 (ஆ) 4 (இ) $-5$ (ஈ) 2
7. $(0,0)$ மற்றும் $(-8,8)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின் சாய்வு
   (அ) $-1$ (ஆ) 1 (இ) $\frac{1}{3}$ (ஈ) $-8$
8. கோட்டுத்துண்டு $PQ$–யின் சாய்வு $\frac{1}{\sqrt{3}}$ எனில், $PQ$–க்கு செங்குத்தான இரு சம வெட்டியின் சாய்வு
   (அ) $\sqrt{3}$ (ஆ) $-\sqrt{3}$ (இ) $\frac{1}{\sqrt{3}}$ (ஈ) 0
9. $Y$ அச்சில் அமையும் புள்ளி $A$ –யின் செங்குத்துத் தொலைவு 8 மற்றும் $X$ அச்சில் அமையும் புள்ளி $B$–யின் கிடைமட்டத் தொலைவு 5 எனில், $AB$ என்ற நேர்க்கோட்டின் சமன்பாடு
   (அ) $8x + 5y = 40$ (ஆ) $8x - 5y = 40$ (இ) $x = 8$ (ஈ) $y = 5$
10. $7x - 3y + 4 = 0$ என்ற நேர்க்கோட்டிற்குச் செங்குத்தாகவும், ஆதிப்புள்ளி வழிச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு
    (அ) $7x - 3y + 4 = 0$ (ஆ) $3x - 7y + 4 = 0$ (இ) $3x + 7y = 0$ (ஈ) $7x - 3y = 0$
11. (i) $l_1$; $3y = 4x + 5$ (ii) $l_2$; $4y = 3x - 1$ (iii) $l_3$; $4y + 3x = 7$ (iv) $l_4$; $4x + 3y = 2$
    எனக் கொடுக்கப்பட்ட நான்கு நேர்க்கோடுகளுக்குக் கீழ்க்கண்ட கூற்றுகளில் எது உண்மை
    (அ) $l_1$ மற்றும் $l_2$ செங்குத்தானவை (ஆ) $l_1$ மற்றும் $l_4$ இணையானவை
    (இ) $l_2$ மற்றும் $l_4$ செங்குத்தானவை (ஈ) $l_2$ மற்றும் $l_3$ இணையானவை
12. $8y = 4x + 21$ என்ற நேர்க்கோட்டின் சமன்பாட்டிற்குக் கீழ்க்கண்டவற்றில் எது உண்மை
    (அ) சாய்வு 0.5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு 2.6
    (ஆ) சாய்வு 5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு 1.6
    (இ) சாய்வு 0.5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு 1.6
    (ஈ) சாய்வு 5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு 2.6
13. ஒரு நாற்கரமானது ஒரு சரிவகமாக அமையத் தேவையான நிபந்தனை
    (அ) இரு பக்கங்கள் இணை.
    (ஆ) இரு பக்கங்கள் இணை மற்றும் இரு பக்கங்கள் இணையற்றவை.
    (இ) எதிரெதிர் பக்கங்கள் இணை.
    (ஈ) அனைத்துப் பக்கங்களும் சமம்.
14. சாய்வைப் பயன்படுத்தி நாற்கரமானது ஓர் இணைகரமாக உள்ளது எனக் கூற நாம் காண வேண்டியவை
    (அ) இரு பக்கங்களின் சாய்வுகள்
    (ஆ) இரு சோடி எதிர் பக்கங்களின் சாய்வுகள்
    (இ) அனைத்துப் பக்கங்களின் நீளங்கள்
    (ஈ) இரு பக்கங்களின் சாய்வுகள் மற்றும் நீளங்கள்
15. $(2, 1)$ ஐ வெட்டுப் புள்ளியாகக் கொண்ட இரு நேர்க்கோடுகள்
    (அ) $x - y - 3 = 0$; $3x - y - 7 = 0$ (ஆ) $x + y = 3$; $3x + y = 7$
    (இ) $3x + y = 3$; $x + y = 7$ (ஈ) $x + 3y - 3 = 0$; $x - y - 7 = 0$


P.LAKSHMANAN,
BT ASSISTANT,
GHSS., PAPPAPATTI,
MUSIRI TK, TRICHY DT.
9843954265.




LIVEWORKSHEETS